தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயயஎ	மலர்
ருய	நஎ, ஆனி (1976 — ஜூன் — ஜூலை)	ந

‘திருக்குறளில் பௌத்தம்’

டாக்டர். சோ ந. கந்தசாமி, எம் ஏ, எம். லிட், பிஎச். டி

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பரந்த புலமையும் பனுவல் சாரமும்

நூலறிவும் நுண்ணறிவும் வாய்ந்த மதிக்கிழவர் வள்ளுவப் பெருந்தகையார். தம் வாழ்நாளில் சாந்துணையும் கற்றறிந்த பல்வேறு பனுவல் துணிவுகளையும், பட்டறிந்த அனுபவக் கூறுகளையும் மன்பதை பயனுறத் தொகுத்தும் வகுத்தும் திருக்குறளாக வழங்கியுள்ளார் திருக்குறள் மத நூலோ, மார்க்க நூலோ அன்று; சாத்திர தோத்திர நூலும் அன்று. தத்துவ தருக்க நூலோ எனின், அற்றன்று. தனிமகன் (Individual) பொதுமகன் (Social man) அரசியல் மகன் (Political man) என்ற எப்பாலவர்க்கும் இயைந்த பண்புகளையும் பொறுப்புக்களையும் பாரித்துரைக்கும் வாழ்க்கைச் சட்ட நூல். ஏறக்குறைய எழுபதிடங்களில் பல்துறைப்படும் முந்து நூல்களை மொழிந்துள்ள திறனை அணுகியும் நுணுகியும் நோக்கின், இவர்க்குத் தமிழ், பாலி, பாகதம் வடமொழி என்ற இந்திய மொழிகளில் அழுந்திய புலமை அமைந்த உண்மை வானூர் மதியென வயங்கக் காணலாம்.

தனி நூல், தொகை நூல், என இரு சார் நூல்களையும் வள்ளுவர் மயக்கறக் கற்ற மனத்தினர் எனற்குக் குறட் குறிப்புக்கள் சான்று பகர்வன. ‘நூலோர் வளிமுதல் எண்ணிய மூன்று’ அமைவரண் என்றுரைக்கும் நூல்’ என்பன தனிநூல் வகைக் குறிப்பன. ‘யாமெய்யாக் கண்டவற்றுள்’ ‘நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம்’ ‘நுண்ணிய நூல் பல கற்பினும்’

என்றினையன பன்முகப் பனுவற் குறிப்பின. நிரம்பிய நூற் பயிற்சி படைத்த வள்ளுவர் அரங்கின்றி வட்டாடும் ஆற்றல் பெற்றிலர். தம் பரந்த கல்வியானும் பண்பினுலும் உலகம் தழுவிய ஓட்பமும் நுட்பமும் எய்திய வள்ளுவப் பெருமர் மன் பதைப் பொது நூலாகத் திருக்குறளை நல்கினர் என்க. 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்று கணியன் பூங்குன்ற னாரின் கருத்தினை எதிரொலித்துக் கல்வியே அவ்வுயரிய நிலை யினை வழங்க வல்லது எனச் சாந்துணையும் கற்கத் தூண்டும் அறிவுச் செல்வர் வள்ளுவரே தம் உண்மை அறிவே மிகும் என்றுங்கு பாடிய குறளில் பயின்ற பனுவல்களின் சாரம் பதிந்திருப்பினும் வளம் வாய்ந்த உள்ளத்திற் பொங்கி ஊறிய உண்மை அறிவாகிய (Original thoughts) சிந்தனைத் தேன் றுளிகளின் இருலெனக் குறள் குலவுதல் நோக்கத்தக்கது. ஆதலின், 'குறள் எதற்கும் இடந்தரும் விடுவிடு' எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் கணிப்பாராயினர் வள்ளுவ மாலையும் எல்லாப் பொருளும் இதன்பால் உள என்றிசைத்தல் காண்க. எனினும், இம்மாலையார் பாரதம், இராமகாதை நான்மறை கீதை முதலிய வைதீக நூல்களுடன் குறளை ஒப்புநோக்கினரேயன்றிப் பிடக, அங்க நூல்களைத் தினைத்துணையும் கருதாதொழிந்தது காணத் தக்கது. வைதீகப் பெரியார் வள்ளுவ மாலையினைப் பாடியவர் எனற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

பரிமேலழகரின் ஆய்வுக் குறிப்பு

அரிமேலன்பு பூண்ட பரிமேலழகரும், 'எல்லா நூல்களினும் நல்லது எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல் பாதலின்' என்று வள்ளுவரின் நெஞ்சப் பாங்கினை உள்ள வாறுணர்ந்து தெள்ளிதின் உரைத்ததிறம் வியக்கவும் நயக்க வும் தக்கது. இவ்வுரையாளரே பிறிதோரிடத்தும், 'கடவுள் வாழ்த்திற்கேற்ப, ஈண்டும் பொதுவகையாற் பற்றற்றான் என் ருர். (350) எனப் பகர்தல் எண்ணத்தக்கது. நாவல நாட் டில் தோன்றிய தத்துவங்கள் பலவற்றிற்கும் உரிய சில பொதுக் கொள்கைகள் உள்ளன. இவற்றைத் தேசியத் தத்துவக் கொள்கை என்பர் டாக்டர் இராதாகிருட்டிணனர் இவற்றுள் நிலையாமை என்னும் கோட்பாடும் ஒன்ருகும் பரிமேலழகர் நிலையாமை என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில் இக் கொள்கை பலவேறு தத்துவ வாதிகளுக்கும் உரிய உண்மை யினை விளக்கியுள்ளார். அத் தத்துவங்களில் பௌத்தமும் ஒன்ருகக் கருதப் பெற்றிருத்தலை, 'நிலைவேறு பட்டு வருதலால்

கணந்தோறும் பிறந்திறக்கும் என்பாரும்’ எனக் கணபங்க வாதத்தினைச் சுட்டுதலால் உணரலாம்.

சைவ நூலாகிய கல்லாடமும் “சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது” என்ற வள்ளுவரின் மனச் செம்மையினை மதித்தது. ஆதலின், சமயகோடிகள் எல்லாம் தந்தெய்வம் எந்தெய்வம் என்று எதிர்வழக்கிடற்குரிய ஒருமுதல் போலவே, வள்ளுவர்க்கும் தத்தம் சமயமே அமைவ தாக அரற்றி மலைந்தனர். சமயம் என்பது துறவிகளை உற் பத்தி செய்யும் தொழிற்சாலை என்று எண்ணாது. வாழ்வுக் குகந்த நெறிகளடங்கிய சிந்தனைச் சோலை எனக் கருதியதா லன்றோ, விழுமிய எண்ணங்களை எடுத்து விளம்பும் நீர்மை யினை வள்ளுவர் மாட்டுக் காண்கிறோம். உரைவழி நின்று குறளினைப் பயிலின் சாங்கியம் யோகம் முதலிய வேத வழக் கொடு பட்ட தத்துவங்களும், சைவம், வைணவம் என்ற தமி ழர்க்குத் தனி உரிமையுடைய நெறிகளும், பௌத்தம் சமணம் முதலிய வைதிக மறுப்பு இயக்கங்களும் வள்ளுவர் அறிந்தவை என்ற உண்மை தெற்றெனப் புலனாகும்.

நம் நாட்டில் எழுந்த சமயங்களுள் புத்தர் பிரான் போதித்த அறநெறி ஒன்று தான் இந்நாட்டளவில் நில்லாது உலகெங் கணும் பரவும் சீரும் செப்பமும் பெற்றது. அவர்க்கு உடன் காலத்தவரான மகாவீரரின் அன்பு நெறிக்கும் நாவல நாடு எங்கும் பரவிப் படர்ந்தன. ஆதலின். புத்தரின் போதனைகள் அடங்கிய பிடகங்களும், மகா வீரரின் அருளுரை அடங்கிய அங்காமங்களும் நம் மன்பதைப் புலவரைக் கவர்ந்தன எனக் கருதுதல் சாலும். அதனாலன்றோ குறளில் பௌத்த சமணக் கருத்துக்கள் ஏற்புழி இடம் பெற்று நூற்கும் மரபுக்கும் ஆக்க மும் அழகும் அளிப்பன காண்.

இக்கட்டுரையில் திருக்குறளில் காணப்படும் பௌத்தக் கருத்துக்கள் ஒரு சிலவற்றை ஆராய்ந்து காண்போம். வாய்ப்பு வரும்வழி குறளிற் சமணப் பதிவினைப் பின்னொரு கொல் பேசுவோம்.

சாத்தனார் நோக்கில் வள்ளுவர்

பௌத்தப் பெருங்காப்பியம் பாடிய சாத்தனார் நோக்கில் வள்ளுவர் மகாயான பௌத்தராக மதிக்கப் பெறுகிறார். இறப் பவும் பிற்காலத்து வாழ்ந்த சமணச் சான்றோர் சமயதிவாகரர்

நீலகேசி உரையில் 'எம் ஓத்து' என்று திருக்குறளினை ஏத்து தலின் வள்ளுவர் சமணரே எனச் சாதிப்பவர் பலர். ஆயின், முதன்முதல் கூடுதலான குறள்களை எடுத்தாண்டு ஐயத்திற்கு இடமின்றி வள்ளுவர்க்குச் சிறப்பு செய்த பெருமை பௌத்தப் பெருங்காப்பியத்திற்குத்தான் உண்டு சைவம், வைணவம், சமணம் உள்ளிட்ட பல்வேறு நெறிகளையும், 'பல்வேறு சமயப் படிற்றுரை' என எள்ளி நகைத்த சாத்தனுர் வள்ளுவரையே 'பொய்யில் புலவன்' என்றும் அவர் குறளைப் 'பொருளுரை' என்றும் போற்றிய நேர்மையினை ஆய்வாளர்கள் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

திருவடி வழிபாடு - பாதபீடிகை வணக்கம்

மகாயான பௌத்தம் புத்தரின் அவதாரக் கொள்கையினை விரித்துரைக்கும் இந் நெறிப்படி முழுமுதலாகிய பகவான் புத்தரின் திருவடித் தாமரைகளை வழிபடும் மரபு தோன்றியது. கி. மு. 3 ஆம் நூற்றுண்டில் பார்ஹூத். சாஞ்சி என்னும் பௌத்தத் தலங்களில் செதுக்கப்பெற்ற சிற்பங்களில் தருமச் சக்கரமே புத்தரின் வடிவமாகக் காட்சி தந்தது. கி. பி 2 ஆம் நூற்றுண்டில் எழுந்த அமராவதி சிற்பங்களில்தான் புத்தரின் திருவடிகள் அவர் தம் திருவுருவமாகக் காட்சியளித்தன. மணி மேகலையின் காலத்தில் பாத பீடிகை வணக்கம் தென்னுடு எங் கும் பரவியிருந்தது. கி. பி 4 ஆம் நூற்றுண்டைய காந்தாரச் சிற்பங்களில் புத்தரின் முழு வடிவமும் செதுக்கப்பெற்றது. திருக்குறளில் வள்ளுவர் நற்றுள், மாணடி, அடி, தாள் என யாண்டும் திருவடி மட்டுமே இறைவனுக்குரிய வடிவமாகக் கடவுள் வாழ்த்தில் குறித்துள்ளார்.

ஆதிபகவன் யார் ?

ஆதி முதல்வன், ஆதிசினேந்திரன் என்ற பௌத்தக் குறியீடுகளும் ஆதிபகவன் என்ற வள்ளுவர் வழக்கும் ஒரு பொருளனவாக உள்ளற்பாலன பகவன் என்ற சொல் தமி ழிலக்கியங்களில் முதன்முதல் அருகனையும், புத்தனையும் குறிக் கவே, வந்துள்ளன. சிலம்பில் அருகனைக் குறிக்கும் இச்சொல் மேகலையில் புத்தனைச் சுட்டும் :

'பகவனது ஆணையிற் பன்மரம் பூக்கும்' (3:610)
'பகவன் இந்திரவிகாரம்' (26 : 54. 5)
'பைம்பூம் போதிப் பகவற் கியற்றிய சேதியம்'
(28 : 174 - 75)

ஆதலின், பகவான் புத்தரைப் பகவன் என வள்ளுவர் குறித்தனராதல் கூடும். சினேந்திரன் என்ற சொல்லும் அருக புத்தர்க்கே உரியன காண் புத்தர் பிறந்த கபிலவஸ்துவில் கிடைத்த கல்வெட்டில் ' இதிபகவம் ஜாதேதி ' எனக் காணப்படுகிறது. இங்கு புத்த பகவான் பிறந்துள்ளார் என்பதே இக்கல்வெட்டின் பொருளாகும். பகவத் கீதையிலும் புத்தக் கருத்துக்கள் உள்ளன.

காமதாது. உருவதாது. அருவதாது என மூவகை உலகுகளில் முறையே மானுஷ்ய புத்தர், துடிதலோகத்து நாதர். ஆதிபுத்தர் உள்ளனர் என மகாயான பௌத்தம் முழங்குகிறது. அருவதாதில் உள்ள ஆதிபகவன் மன்பதையிடம் கொண்ட கருணை காரணமாக மனித உருவில் அவ்வப்பொழுது தோன்றுவார் என்னும் நம்பிக்கை மகாயானத்தில் காணப்படுகிறது. ஆதலின் எழுத்துக்களின் வரிசையில் அகரம் முன்னிற்றல் போல, மன்பதைகளில் முன்னிற்பவன் முதலாய் விளங்குபவன் ஆதிபகவனே எனக் கருதினர். அன்றி, அகரத்தில் இருந்துதான் எல்லா எழுத்துக்களும் தோன்றின என்றும், ஆதி பகவனிடம் இருந்துதான் எல்லா உயிர்களும் தோன்றின என்றும் சிலர் கருதுவர். மொழிக்குரிய ஒலிகள் ஒரு குறிப்பிட்ட ஒலியிலிருந்து தோன்றும் என்பது மொழி நூல் உண்மையொடு பட்டதன்று. ஆதலின் அஃது உரையன்மை அறிக.

அறவாழி அந்தணன் யார் ?

அரசரின் ஆணை மண்டிலமெங்கும் இயங்குதலான் சக்கரம் என்று உருவகம் செய்து ஆணைச் சக்கரம் என்பர். அறம் எங்கும் இயங்கவில்லையேல் எவ்வியக்கமும் தடைப்படுமாதலின், அறம் என்னும் ஆழியை (சக்கரம்) புத்தர்பிரான் இயக்குவோர் எனக் கொண்டு ' ஆதி முதல்வன் ' என்றும் பௌத்தர் பகர்வர் மகாயான பௌத்தராகிய அசுவகோஷரும் புத்த சரிதத்தில் தரும சக்கரப் பிரவர்த்தனத்தியேஷணம் என்னும் பதினைந்தாம் இயலில் புத்தர் அறவாழி உருட்டிய அருட்செயலைக் குறித்துள்ளார். வீரசோழிய உரைமேற்கோளும் ' அறவாழி பயந்தாய் நீ ' எனப் போற்றுதல் காணலாம். இந்நிலையில் ' அறவாழி என்பதனைத் தருமச் சக்கரமாக்கி அதனை உடைய அந்தணன் என்று உரைப்பாரும் உள! ' என்று வைதிகராகிய பரிமேலழகர் தமக்கு முற்பட்ட பொன்னுரையினை மறவாது குறித்துப் போதல் நம் சிந்தனையைத் தொடுகிறது எனவே. அறவாழி அந்தணன்

என்ற வள்ளுவரின் வழக்கு புத்தரைக் குறிப்பதாகக் கொள்ளு தல் தக்கதெனத் தோன்றுகிறது புத்தரின் பொன்மொழிகளைப் பாரெங்கும் பரப்பிய மாமன்னன் அசோகனும் இத்தருமச் சக்கரத்தினையே தன் அரசியல் சின்னமாகக் கொண்டதும், விடுதலை பெற்ற நம் பாரதப் பெருநாடும் இவ்விலச்சினையையே அரசியல் பொறியாகப் போற்றுதலும் எண்ணிப் பார்மின்கள் : அறவாழி - அறக்கடல் எனக் கொள்ளினும், புத்தரின் மேலான அறவணன் யாருளர் என்றே வினா எழுகிறது.

வைதிக பரமாக உரைகாணும் சான்றோர்கள் நம் கருத்தினை எளிதில் ஏலார். அறவாழி என்பதற்குத் தருமச் சக்கரம் எனப் பொருள் கூறின் பிறவாழி என்பதற்கு யாது பொருள் என்பர். பிறவாழி என்பது அறக் கடல் அல்லாத ஏனைய பொருளின்பக் கடல்களைக் குறிக்கும் எனப் பரிமேலழகர் கொண்டனர், ஆயின் பிற என்ற சொல் பிறப்பு என்ற பொருளையும் தருதலின் பிற வாழி - பிறப்பாகிய கடலைக் கடக்கத் தருமச் சக்கரத்தையுடைய அந்தணன் தாளினை அடைதல் வேண்டும் எனக் கொள்ளலாம். பரிப் பெருமாள் பிறவு + ஆழி = பிறவாழி எனப் பிரித்து, பிறவிக் கடல் என்று பொருள் கூறினர். திருவாசகத்தில் சிறவு = சிறப்பு என்ற பொருளில் வந்திருத்தல் போல் பிறவு = பிறப்பு என்ற பொருளில் திருக்குறளில் வந்ததாகக் கருதலாம். ஆனால் சங்க இலக்கியங்களில் முதல் நிலைத் தொழிற் பெயர்கள் பல வருதலைக் காணலாம் பதிற்றுப்பத்தில் 'இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்' எனக் கபிலர் பாடிய பகுதியில் இர —இரப்பு என்ற பொருளில் வழங்குதல்போல் பிற – பிறப்பு என்ற பொருளில் வள்ளுவர் வழங்கியிருத்தல் கூடும். இக்குறள் கருத்தினை வேறொரு வாய்பாடு பற்றி 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்ற இறுதிக் குறளில் ஓதினார் எனக்கொள்ளுதல் வேண்டும்; கூறியது கூறலாகக் கொள்ளற்க. ஓரதிகாரத்திற்குள் இங்ஙனம் அனுவாதமாக அமைந்த குறள்கள் பல உள என்பதையும் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

அந்தணன் யார் ?

பரதுக்கதுக்கியாகிய புத்தர் பல்வேறு உயிரினங்களின் பால் பூண்ட செந்தண்மையால் எறும்பு முதல் யானை ஈறுகிய எண்ணற்ற பிறவிகள் எடுத்து அந்தணன் என அழைக்கப் பெற்ற திறனைத்தம்மபதம், சரியாபிடகம் முதலிய பாலி நூல் களினால் அறிகிறோம். அந்தணர் என்போர் அறவோர் எனப்

போதி சத்துவப் பெரியாரையும் வள்ளுவர் குறித்தனர் என்க. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர். அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறளுரையில் குறிக்கப்படும் சிபியின் கதை சரியாபிடகத்திலும் சாதகமாலையிலும் இடம் பெற்ற புத்தரின் அருட்கதையே என்க.

வாலறிவன் யார்?

விழுமிய மேலான மெய்யறிவு தலைப்பட்டதால் புத்தரைப் போதம் பெற்றவர் என்ற பொருளில் வழங்குவர். வாலறிவன் என வள்ளுவர் சுட்டுதல் புத்தரையே என எண்ணுதல் சாலும். மெய்ப்பொருள் காணும் நல்லறிவுதான் உய்திக்கு வழி எனக் கூறிப் பேதமையினை முதல் தளையாகக் கொண்டு அதனைக் களைய மெய்யறிவுதான் நெறியென வகுத்தருளிய புத்தரை வாலறிவன் எனக் கூறுதல் ஏற்புடையதே. வேண்டுதல் வேண்டாமையிலான் அவனின் யாருளர்.

மலர்மிசையேகினன் யார்?

மறம் கடிந்து அறம் நிலைபெறுதற்கு அவ்வக் காலத்துப் புத்தர் தோன்றுவர் என்னும் அவதாரக் கொள்கையினை மகா யான பௌத்தம் வலியுறுத்தும். புத்தர் பிறந்து நடை பயின்ற பொழுது அவர் பாதம் மண்ணில் படாமல் தாமரை மலர்கள் தாங்கின என்றும் அம்மலர்மிசை நடந்தான் என்றும் இலலித விஸ்தரம் என்ற மகாயான பௌத்த நூல் எடுத்தியம்புகிறது. (Vide, Literary History of Sanskrit Buddhism, page 21.) இக்கருத்தினை உட்கொண்டு வள்ளுவரும் 'மலர்மிசையேகினன்' எனக் குறித்தல் காணலாம். "இதனைப் பூமேல் நடந்தான்' என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர்" எனப் பரிமேலழகர் குறித்துச் சென்ற பழைய உரைக் குறிப்பும் நம் கருத்திற்கு அரண் புரிதல் காண்க.

ஐந்தவித்தான் யார்?

மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளை வழியாக உடைய அவாவினை அறுத்துப் பொய்தீர் ஒழுக்க நெறியை உலகிற்கு அளித்தவர் யார்? ஐம்புலன்களையும் அடக்கித் தவம் புரிந்து போதியின் கீழ் மெய்யுணர்வு பெற்று விசுத்திமார்க்கம் ஆகிய பொய்யற்ற ஒழுக்க நெறியை வழங்கிய அருட்கொடைஞர் புத்தரே. புத்தர் நிலை நோக்கி மூபாலும்

போதி சத்துவர்க்கும் இப்பண்பு அமைவு இயம்பப்பெறும். கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட ஐந்தவித்தான் ஒழுக்கநெறி என்ற தொடரும் நீத்தார் பெருமையில் ஐந்தவித்தான் ஆற்றல் என வரும் பகுதியும் இணைத்துப் பார்க்கத்தக்கவை. முன்னது புத்தனையும் பின்னது போதிசத்துவனையும் குறித்ததாகக் கொள்ளலாம். ஐந்தவித்த அருகனை இந்திரனே வழிபட்டுப் பெருமை செய்வான் எனச் சமணச் சார்பில் விளக்கங் கூறுவாரும் உண்டு. ஐம்புலனையும் வென்ற புத்தர் பிரானுக்கு இந்திரன் பாத பீடிகை அமைத்து வழிபட்டுப் புலன் வென்றவனின் ஆற்றலை உலகிற்கு உணர்த்த ஒரு சான்றாக உள்ள நிலையைப் பௌத்தச் சார்பினர் எடுத்துரைப்பர். ஆயிரம் யானைகளை வென்றவனைவிட ஐம்புலன்களை வென்றவனே சிறந்த வீரன் எனத் தம்மபதம் முழங்குதல் காண்க சிலப்பில் ஐவரை வென்றோன். மலர்மிசை நடந்தோன் என அருகன் குறிக்கப் பெறுதலின் வள்ளுவர் பௌத்த சமண நெறிகளுக்குப் பொது நிலையில் இத்தொடர்களைப் பயின்றனரோ என எண்ண வேண்டி நிலையில் இருக்கிறோம்.

எண்குணத்தான் யார்?

இத்தொகைச் சொல் திருக்குறளினை அடுத்து முதன் முதல் சிலப்பதிகாரத்தில்தான் பயிலப்படுகிறது சமணச் சாரணர், 'பண்ணவன், எண்குனன்' (10 : 188) என்று அருக பரமேட்டியைப் பரவுதல் காணலாம். பரிமேலழகர்க்குக் காலத்தால் முற்பட்ட அரும்பதவுரைகாரர், எண்குணம் என்றது அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், அநந்த நாமம், நிட்களம். நிராயுஷ்யம், சற்பாவனை என இவை என்று அருகனின் எண்குணங்களை எடுத்துரைத்தனர். அடியார்க்கு நல்லாரும் இக் கருத்தினரே. சாரணர் உரையில் 'இறைவன் குரவன் இயல்குணன எங்கோன்' என்றும், 'குணப்பெரும் கோமான்' என்றும் குணக்குன்றாக அருகதேவன் குறிக்கப் பெறுகிறான். இவ்வாய்ப்பாட்டினால் புத்த பகவானை 'எங்கோன் இயல்குணன் ஏதமில்குணப்பொருள்' என்று சாத்தனுர் பரவுதல் காண்க. ஆதலின், எண்குணத்தான் குறியீடு அருகனைக் குறித்தாற்போலவே பகவான் புத்தரையும் குறித்ததாகக் கொள்ளும் வகையில் வள்ளுவர் வழங்கியுள்ளார். நற்காட்சி, நல்லூற்றம் நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லார் இணக்கம் என்ற எண்வகை நெறிகளை மக்களுக்கு வழங்கிய வள்ளலை

எண்குணத்தான் எனக் கூறுதல் ஏற்புடையதே. ஆயின் பரிமேலழகர், ' தன்வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை உணர்வினனுதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என இவை " இவ்வாறு சைவாகமத்துள் கூறப்பட்டுள்ளது என்று எழுதியுள்ளனர். எச்சைவாகமத்து எப்பகுதியில் இவ்வாறு கூறப்பட்டது என இதுவரையும் எடுத்துரைத்தாரைக் கேட்டிலம். அவரே மேலும் அணிமாவை முதலாக உடையன எனவும் கடையிலா அறிவை முதலாக உடையன எனவும் உரைப்பாரும் உளர் என்றுர். யோக நெறியில் அணிமா முதலாக எண்வகைச் சித்திகளைக் கூறுவர். கடையிலா அறிவு என்பது அநந்தஞானம் ஆகும். இக்கருத்து சமணற்கு உரியது என்பதும் இதுவே பரிமேலழகர்க்கு முன்பு வழங்கி வந்தது என்பதும் அவர் உரை உணர்த்தும் உண்மையாகும்.

பற்றற்ருன் யார் ?

காதி, அகாதி வினைத்தளைகளை அறுத்த அருகனைக் குறிப்பதாகச் சமணர் கூறுவர், மன்பதை உய்ய மனைவாழ்க்கை அரசபோகம் முதலிய பற்றுக்களை விட்டுச் சென்ற தியாகச் செம்மலாகிய புத்தரைக் குறிப்பதாகக் கொள்ளினும் இழுக்காது. மனைவி மக்களுடன் சைவ வைணவங்களின் வரும் தெய்வங்கள் பற்று உற்ற நிலையில் பேசப்பெறுதல் போல், திருக்குறளில் யாண்டும் கூறப்பெருமையினை ஆய்வாளர்கள் சிந்தித்தல் வேண்டும். பற்று நீங்கியவன் வினை நீங்கியவன், விருப்பு வெறுப்பு நீங்கியவன் என்று துறவு நிலை நின்று, ஐம்புலன் வென்று உயர்ந்த அருகனையோ புத்தனையோ குறிக்கும் பாங்கில்தான் தெய்வக் குறியீடுகள் பலவும் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

வகுத்தான் யார் ?

பௌத்த சமணங்களில் செய்வினைகள் தாமே சென்று கருத்தாவைத் தொடரும் என்ற கருத்து உண்டு. ஆனல், சைவம் முதலிய சமயங்கள் வினைகள் சடப்பொருளாதலின் அவற்றை உண்பிப்பான் ஒருவன் வேண்டும் என்ற கருத்துரைப்பன. வகுத்தான் வகுத்த வகை என்ற குறள் சமண பௌத்தக் கொள்கைக்கு முரண்படும் என்றும் எடுத்துரைப்பர். எனினும் ஊழ் அதிகாரத்தில். இழவூழ் பேதைப்படுக்கும்,

ஆகலூழ் அறிவகற்றும், ஊழ் முந்துறும் எனப் பல இடங்களி லும் ஊழ் தானே சென்று முந்திக்கும் என்ற கருத்தே காணப் படுகிறது. ஆதலின், வகுத்தான் என்ற சொல் ஊழ் தானே தன்னை வகுத்துக் கொள்ளும் நிலையில் பெறும் பெயர் என லாம். 'வழக்கினுகிய உயர்சொற் கிளவி' என்புழி, சேனு வரையர் அஃறிணைப் பெயர்களை ஒரு காரணம் பற்றி உயர் திணையாக வழங்கலாம் என்பதற்குத் தன்னினம் முடித்தல் என் னும் உத்தியால் வசதி செய்து கொடுத்துள்ளார். திங்களஞ் செல்வன், தென்றற்செல்வன் என்றுற்போலக் கொள்க. செய் வினைகளின் நுண்கூறு உடன் உறையும் ஆதலின் அவை தாமே விளையுங்கால் வெளிப்படும் என்று பௌத்த சமணம் கருதின என்க.

'பிறவிப்பெருங்கடல்' — சாத்தனுர் கருத்து

கடவுள் வாழ்த்தில் வரும்,

> 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவன் அடி சேராதார்'

என்ற குறளில் குறிக்கப் பெறுபவர் புத்த பகவானே என்ற எண்ணத்தினர் சாத்தனுர். ஆதலின்,

> 'அறவியங் கிழவோன் அடியிணை ஆகிய
> பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
> அறவி நாவாய்' (11 : 23—25)

என்று குறள் விளக்கம் கூறிப்போந்தனர்,

புத்தரின் பொன்மொழிகள்

அன்றுட வாழ்க்கையில் மக்கள் பின்பற்றற்குரிய சிறந்த சீலங்களைப் புத்தர் பிரான் வழி நின்று வள்ளுவர் மன்பதைக் குப் பரிந்துரை செய்துள்ளார். கள்ளுண்ணுமை, காமமின்மை கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை என்ற ஐவகைச் சீல மும் பிடக நூல்களிலும் மகாயான நூல்களிலும் பெரிதும் பேசப்பெறும் அறங்களாகும். இவை திருக்குறளில் யாங்ஙனம் இடம் பெற்றுள்ளன என்பதை இவண் காண்போம்.

கள்ளுண்ணுமை

சங்க இலக்கியம் காட்டும் மக்கள் வாழ்க்கைக்கும் திருக் குறள் புலப்படுத்தும் சமுதாய நிலைக்கும் அரிதும் பெரிதுமான மாற்றங்கள் காணப்படுகின்றன. அந்தணனுயினும் கபிலர்

கள்ளும் கறியும் அயின்ற செய்தியைப் புறநானூறு புகலும் (103). ஏணிச் சேரி முடமோசியார் வள்ளலாய் அண்டிரனைப் பாடுங்கால் முள்ளம்பன்றியின் கறியை வழங்கிய கொடையினைச் சிறப்பித்துள்ளார். நல்லிசைப் புலமை மெல்லியல் ஆயினும் ஔவை ‘சிறிய கள் பெறினே எமக்கீயும் மன்னே’ எனப் பாடுதலின் இன்னார் இனியார் என்ற வேறுபாடின்றிக் கட்குடி சங்க காலத்தில் நாகரிகமாகக் கருதப்பட்டது என்க. இறை பொருள் கொண்ட பரிபாடலும் கள்குடித்தலைப் பன்முறை பகர்ந்துள்ளது. செவ்வேள் அன்பர் நக்கீரர் கூட நன்மாறனை வாழ்த்தும் இடத்து,

> யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
> பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
> ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
> ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற (புறம். 56)

என்று வாழ்த்தியுள்ளார். சங்கப் புலவருள் ஒருவர் கூட கள் குடியைக் கண்டித்துப் பாடவில்லை. கள்ளுண்ணாமை என்ற பேரறத்தினை முதன் முதல் தமிழர்க்குப் போதித்தவர் வள்ளுவரே. சங்க காலத் தமிழரின் பழக்க வழக்கத்திற்குப் புறம்பான இச்சீர்திருத்தச் சிந்தனையை இந்தியாவில் முதலில் கூறியவர் வள்ளுவரே எனக் கண்மூடித்தனமாகக் கதைப்பது எட்டுணையும் இசையாது. புத்தர் பிரான் புகட்டிய சீலத்தை வள்ளுவர் தமிழகத்தில் வழங்கினர் எனக் கூறுதல் நேரிது. கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தில்,

1. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
   சான்றோர் முகத்துக் களி 923
2. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
   நஞ்சுண்பார் கள்ளுண் பவர் 926
3. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
   குளித்தானைத் தீத்துரீஇ அற்று 929

எனவரும் குறள்களை உற்று நோக்குக.

கொல்லாமை

சங்க காலத் தமிழ் வேந்தர்கள் வேதநெறியில் சிக்கி வேள்விகள் பல புரிந்தனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனப் பலர் உளர். ஆவூர் மூலங்கிழார் 21 வேள்விகள் பற்றிய செய்திகளைப் புற

நானூற்றில் குறித்துள்ளார். பதிற்றுப்பத்திலும் வேள்விக் குறிப்புக்கள் மிகுதி. நாவல நாட்டில் முதன் முதல் வேள்வியில் உயிர்க்கொலை நிகழ்வதைத் தடுத்த கருணைக் கடல் புத்தர் தான், பிம்பிசாரனை வேள்வியை விடுத்து அருள்நெறிக்கு அழைத்துச் சென்ற அற்புதத்தை இலலிதவிஸ்தரம், சுமங்கல விலாசினி, பிம்பிசாரக் கதை என்ற நூல்கள் எடுத்து உரைக்கும். முதன் முதல் தமிழகத்தில் வேத வேள்வியைக் கண்டித்துப் புத்தரின் கொல்லாமை அறத்தைப் புகட்டிய நல்லோர் வள்ளுவரே.

சங்க இலக்கியம்

நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதிப் பொங்கப் பன்மாண்
வியாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்

— புறம். 15 . 17 — 21

வள்ளுவர் வாய்மொழி

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று

கொல்லாமை புலால் மறுத்தல் என்ற தலைப்புக்களில் காணப் படும் அகிம்சைக் கருத்துக்கள் புத்தர் போதனைகளின் மறுபதிப்பே.

' தினற்பொருட்டால் '

பௌத்தரினும் சமணர் சற்றுக் கூடுதலாகக் கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய அறங்களைக் கூறியுள்ளனர் என்பர். பௌத்தருள் ஒரு சாராராகிய சௌந்திராந்திகர் கொன்றால் பாவம் தின்றால் போகும் என்ற கருத்தினர். பிடகங்களில் கூட புலால் மறுத்தல், உடன்படல் என்ற இருகருத்தும் வெவ்வேறு இடங்களில் விளம்பப் பெற்றுள்ளன. பௌத்தம் பரவிய திபெத்து, சீனம், ஜப்பான், இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய நாட்டவர்க்கு அகிம்சை என்றால் என்ன என்றே தெரி யாத காலத்தில் பௌத்தத்தை அவர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நடுப்பாதையை (Middle - Path) வகுத்துக் காட்டும் நிலை பௌத்தத் தேரர்களுக்கு ஏற்பட்டது. இதனாற்றான் நாகர் தலைவனுக்குக் கொல்லாமை அறங்கூறும் பௌத்தச் சாதுவன்.

‘ அடுதொழில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்து விளி மாவொழித்து எவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிக ’ (16 : 115—117)

என்று அறவுரை பகர்ந்தனன். இலங்காவதார சூத்திரம் என்ற மகாயான நூல் வேள்வியில் உயிர்க்கொலையைத் தவிர்க்க பிம்பிசாரருடன் உரையாடி அன்பு நெறியை நிலைநாட்டிய புத்தர் ஒரு ஞான்றும் புலால் உணவை உடன்பட்டிலர் என்றுரைக்கிறது அந்நூலின் சாரம் இதுவே

“ Oh ! wisemen .. In future there will arise in my Sanga some putting on a garb of a monk ... Will be bent upon deluding the people to bodily pleasures. They will preach false rules of conduct with the object of satisfying their own tastes, they will compile books investing false argument justifying flesh - eating. But Oh wisemen, I have never ordered flesh eating in any sutra nor did I include it among the proper and acceptable food. I also treat all creatures as my own children. Then how can I order my disciples to eat the flesh of my own son and how can I myself eat it ”.

பரிமேலழகர் பின்நிகழும் தின்கை முன்நிகழும் கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை என்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி அளவையால் காரணமாதல் சாதித்தலின், என்று எழுதியிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது. ஊன் தின்பார் இருப்பதால்தான் கடைக்காரன் கொல்கிருன். கொலைக்குக் காரணம் தின்பாருமாம். தின்பாரிலரேல் கொலை இல்லை. புலால் விற்பனையும் இல்லை. பொருட்பாலில் குடிமக்கட்குரிய இயல்புகளை வரையறுக்கும் குறள் ஒன்றில்,

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு ’

எனக் கொல்லா விரதத்தினை வலியுறுத்தலின் சமண ஆதிக்கம் குறளில் பதிந்துள்ளது எனக் கூறுதல் நேரிதே. எனினும் பௌத்தருள் புலாலை அறவே வெறுத்த பிரிவினரை வள்ளுவர் பின்பற்றியே ‘ தினற்பொருட்டால் ’ என்ற குறளைக் கூறியிருத்தல் கூடுமோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. திருஞான

சம்பந்தரும், 'விடக்கொருவர் நன்றென விடக்கொருவர் தீதென' என்ற தேவாரத்தில் இவ்விருவகையினரையும் சுட்டுதல் காண்க.

கொல்லாமையினைப் போல் சூதாடாமையினையும் சிறந்த அறமாகப் பௌத்த சமண நெறிகளைப் பின்பற்றி வள்ளுவர் வகுத்திருத்தல் கூடும்.

காமம் இன்மை

இல்லறத்தார்க்குப் பிறனில் விழையாமையும் கணிகை நாடாமையும், துறவறத்தார்க்கு முற்றிலும் காமமின்மையும் இச்சீலமாக பௌத்த பிடகங்களில் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் பரத்தைப் பெண்டிர் தொடர்பு பரவலாக விளங்கியது: நாகரிகமாகவும் கருதப்பட்டது. புறநானூற்று வரிகள் சில குறிப்பாகப் புறத்தொழுக்கத்தை மறுத்து உரைப்பினும் வள்ளுவர்போல் வன்மையாகச் கண்டித்த சங்கப் புலவர்கள் இவர் என்க. வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில்.

> பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதில் பிணம் தழீஇ யற்று'
> இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு

எனச் சினந்துரைத்தல் நோக்குக பரத்தை நாடாமை தமிழர்க்குப் பௌத்த நெறி நின்று வள்ளுவர் கற்பித்த புது அறமாகும்.

பொய்யாமை, கள்ளாமை

இவ்வறங்கள் சங்க நூல்களில் ஓரோவழி காணப்படுவன, இவற்றையும் பௌத்தப்படுத்தல் தகாதுகாண். சில சீலங்கள் இந்திய மக்கள் அனைவர்க்கும் பொதுவுடைமையாய்த் தொன்று தொட்டே வந்தனவாகக் கருதுதல் கூடும். வள்ளுவர் இவ்விரண்டையும் ஐவகைச் சீலம் என்ற தொகைக்கு உறுப்பாகக் கொண்டு கள்ளாமை, வாய்மை, எனத் தனித்தனி அதிகாரம் வகுத்தனர் என்க. இருசார் பௌத்தப் பிரிவுகளும் எடுத்தியம்பும் தானம், சீலம், பொறை. வீரியம். தியானம், பிரஞ்ஞை. உபாயம், தயை, பலம், ஞானம் என்ற பத்து வகைப் பாரமிதைகளையும் வள்ளுவர் அறிந்தவரே. விரிப்பிற் பெருகும் என விடுத்துச் செல்வேன்.

பத்துவகைக் குற்றங்கள்

எண்ணத்தின் விளை நிலமான மனம், சொல்லின் நிலைக் களமான வாய், செயலின் இருப்பிடமான மெய், என்ற முக் கரணத்தூய்மையினை சுத்தபிடகம், விரிவாக விளம்புகிறது. (History of Pali literature Vol I, p 122) சுத்த பிடகம். மஜ்ஜிம நிகாயத்தில் கூறப்படும் அறறக் கருத்தினை அடியொற்றிச் சாத்தனரும் வள்ளுவரும் அறங்களை ஒழுங்குபடுத்தியுள்ளனர் எனலாம். சாத்தனர்,

கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா உடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவநான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி என்று
உள்ளந் தன்னில் உருப்பன மூன்றும் எனப்
பத்து வகையால் (30 . 66—72)

என அழகுறப்பிடகப் பகுதியை மொழி பெயர்த்தனர். இவ்வறக் கூறுகளைக் குறளில் கொல்லாமை, கள்ளாமை. பிறனில் விழை யாமை, வரைவின் மகளிர்: வாய்மை, புறங்கூறுமை, இனி யவை கூறல், பயனில சொல்லாமை; வெஃ காமை. வெகுளாமை நிலையாமை, மெய்யுணர்தல் முதலிய பல்வேறு தலைப்புக்களில் வள்ளுவர் சுத்தபிடகத்தின் வழிநின்று வழங்கினர் எனக் கருதுதல் ஏற்றது.

சமத்துவம் பேசிய முதல்வர்

பிறப்பினல் சாதி பேதம் பேசிய வேதநெறியை விடுத்து ஒருவன் புரியும் செயல்தான் உயர்வு தாழ்வுக்குக் காரணம் என்றும் பிறப்பினல் அனைவரும் சரிநிகர் சமானரே என்றும் சமத்துவம் பேசிய முதல் இந்தியர் புத்தரே பேராசிரியர் மக்கன்ச என்பார் The concept of social equality is one of the greatest contributions which Buddhism has made to Indian ethical thought He made no religious distinctions between men of different castes, but associated with men of all castes & throw his order open to all ..... He realised that a man's position was determined by his karma, but that did not involve the institutions of fixed and unalterable social divisions, (vide. The Religious Quest of India) என்று இயம்புதல் காண்க.

மணிமேகலையில் ஆபுத்திரன் தன் பிறப்பினை இழிவுபடுத்திப் பேசிய வேதப் பிராமணர்களை நோக்கி வேத இருடிகள் பலர் பிறப்பினுல் இழிவுடைமையைச் சுட்டிக் காட்டுதல் நோக்கத்தக்கது. ஆதலின் சமத்துவம் என்பது பௌத்தத்தில் இன்றியமையாகக் கொள்கையாக இடம் பெற்றுள்ளது.

தம்மபதம் It is not right to call men white who virtue lack, For it is sin and not skin that makes men black.

என மொழிதல் எண்ணத்தக்கது. பல்வகையில் தாழ்த்தப்பட்ட மரபினரையும் தன் நெறியினைத் தழுவச்செய்து உய்தியளித்த உரவோர் உரையினை உட்கொண்டு வள்ளுவரும் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று சமத்துவம் சாற்றினர். இந்நிலையில் பழந்தமிழ்க் குடிமகனுக வள்ளுவரைக் கூறும் வழக்கும் நினைக்கத்தக்கது. சங்க இலக்கியத்தில்,

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே' (187)
துடியெறியும் புலைய,
எறிகோல் கொள்ளும் இழிசின (புறம். 287)

எனச் சமுதாய ஏற்றத் தாழ்வு தலை தூக்கி நிற்றல் காணலாம். புத்தர் அடிச்சுவட்டில், தாழ்த்தப்பட்ட பழந்தமிழர் ஆகிய வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் எனக் கூறுதல் புதியதோர் கொள்கையே.

பசிபோக்கும் பேரறம்

இவ்வறம் புத்தபிடகத்தில் மிகுதியாகக் கூறப்படுகிறது. சங்க நூல்களிலும் தமிழ்ப் பெருமக்கள் இல்லறத்தில் தலை நிற்றலைக் காண்கிறோம் ஆதலின் இதனைப் பௌத்தம் ஒன்றற்கே உரிமைப்படுத்துவது ஒவ்வாது. ஆயினும், ஏனைய பௌத்தக் கூறுகள் திருக்குறளில் இடம் பெறுதலை எண்ணுமிடத்து இல்லறம் தமிழ்நெறி பௌத்த நெறி ஆகிய இரண்டினின்றும் வள்ளுவர் வகுத்துக் கூறியதாகக் கொள்ளுதல் குற்றமில்லை அற்றார் அழிபசி தீர்த்தல் என்றார் வள்ளுவர், மணிமேகலையில் பசிபோக்கும் பேரறமே பௌத்த அறங்களில் நடுநாயகமாக நிற்கக் காண்கிறோம்,

அரசியல் கருத்துக்கள்

சுத்தபிடகத்தின் ஒரு பகுதியாகிய தீகநிகாயத்தில் சக்கவத்தி சுத்தத்தில் தம்ம ராஜ்ஜியம்' (அறவரசு) பேசப்படுகிறது. தருமச் சக்கரமே அரசனின் அடையாளம் ஐவகைச் சீலங்களையும் அரசன் பாரெங்கும் பரப்புதல் வேண்டும் என்று இப்பகுதி கட்டளையிடுகிறது சாமஞ்ஞ பலசுத்தத்தில் சனநாயகத்தன்மை வலியுறுத்தப்பட்டது அக்கஞ்ஞ சுத்தம் மக்கள் மனத்தை மகிழச் செய்பவனே மன்னன் என்றும் அவன் மக்களின் பிரதிநிதி என்றும் இயம்புகிறது. பரிநிப்பான சுத்தம் அரச உறுப்புக்கள் ஏழு என விரித்துரைக்கிறது. வள்ளுவரும் பொருட்பாலைத் தொடங்கும்பொழுது இவ்வுறுப்புக்களை உடையவனே அரசன் எனக் கூறக் காணலாம். சங்கத் தமிழரின் அரசியற் சிந்தனைகளுக்கிடையே பிடக எண்ணங்களும் கௌடலியரின் அரசியல் கொள்கைகளும் வள்ளுவரின் பொருட்பாலில் இடம் பெற்றன என எண்ணலாம்.

மருந்து

வள்ளுவரின் மருந்ததிகாரம் புத்தர் பாரத்துவாசனுக்குப் புகட்டிய போதனையுடன் ஒப்பிடத்தக்கது பௌத்த நூல்களில் மருந்தினைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

Vide Literary history of Sanskrit Buddhism by
J G. K. Narimann pp 267—278

In the vianyapidaka (Mahavagga) we obtain quite incidentally a very fair insight into a good deal of the medical lore current at that early period about 400 B. C.

Vide History of Pali Literature by Doctor B. C Law Vol. I p. 61

நோய், தோற்றம், நோய்நீக்கம். நோய் நீக்கவழி என்ற நான்கு வாய்மைகளை மையக் கொள்கையாகக் கொண்ட பௌத்தத்தைப் பின்பற்றியே வள்ளுவரும் நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் என்றார். புத்தரை மருத்துவன் என்றே பிடக நூல்கள் பேசும்

துறவு நிலையாமை முதலியன

சார்வாகம் நீங்கலாக இந்திய தத்துவங்கள் பலவும் ஒத்துக் கொண்ட வினைக்கொள்கை, நிலையாமை, துறவு முதலிய கொள்

கைகள் தேசிய தத்துவக் கிடங்கிலிருந்து ஒவ்வொரு நெறியும் உருவாக்கிக்கொண்டன எனலாம். நிலையாமை, துறவு, அவா வறுத்தல் முதலிய அதிகாரக் கருத்துக்கள் பௌத்தத்துடன் நெருங்கிய தொடர்புடையன.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

என்ற குறளைப் பௌத்தக் காப்பியம் 'பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறததலும் உறங்கலும் விழித்தலும் போன்றது' எனப் பேணுதல் காண்க.

மெய்யுணர்வு

எப்பொருளின் உண்மைத் தன்மையினையும் ஐயம் திரிபற ஆராய்ந்து உணர்தலே மெய்யுணர்வு எனப்படும். இதுவே விடுதலைக்கு வழி என்றார் புத்தர். துன்பத்திற்குக் காரணம் பிறப்பு, பிறப்புக்குக் காரணம் ஆசை. இங்ஙனம் காரண காரியங்களாய் அமைந்துள்ள பன்னிரண்டு நிதானங்களும் துக்கத்திற்கு அடிப்படை. காரணம் களையவே காரியம் நீங்கும் என்று விநயபிடகம், புத்த சரிதம் முதலிய நூல்கள் மொழிகின்றன. நிதானம் என்ற பாலிச் சொல்லைச் சார்பு எனத் தமிழில் வள்ளுவர் தருகிறார். பிற சார்புகள் அனைத்தும் பேதைமையிலிருந்து தோன்றுதலின் இப்பேதைமையே பிறப்பிற்குக் காரணம் என்று பிடக நெறி நின்று வள்ளுவர் பேசினார்.

'பிறப்பென்னும் பேதைமை நீங்க சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' இதற்கு அடுத்த குறளில் பேதைமை முதல் வினைப்பயன் ஈறுகிய சார்புகள் பன்னிரண்டின் இயல்புகளையும் உள்ளவாறு உணர்ந்து அவற்றின் நீங்கி வாழ பிறவி நோய் நீங்கும் என்று வள்ளுவர் பௌத்தக் கருத்தினைப் பகர்ந்துள்ளார்.

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்

பிறவாப் பேரின்பமாகிய நிர்வாணப் பேற்றினை அடைய காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களையும் முனிதல் வேண்டும் என்று சுத்தபிடகம், புத்தசரிதம், இலங்காவதார சூத்திரம் முதலியன இயம்புகின்றன. இப் பௌத்த நூல்கள் பகரும் மெய்ப் பொருளை வள்ளுவர் "காமம், வெகுளி, மயக்கம், இம்

மூன்றின் நாமம் கெடக் கெடும் நோய்'' என்று அடுத்த குறளில் கூறியுள்ளார் ஆதலின் பிறவிநோய் போக பன்னிரு சார்புகளினின்றும் விடுபடுதலும், முக்குற்றம் களைதலும் வேண்டப்படுவன என்பது பௌத்தச் சார்புடைய குறட் கருத்துக்களாகும். சுத்த பிடகத்தில் நிர்வாணப்பேறு என்பது காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றும் நீங்குதலே என்று புத்தர்பிரானும் அவர் சீடர் சாரி புத்தரும் மொழிந்துள்ளமையால் புலனாகும். சாத்தனாரும் இவர் வழிநின்று இக்கருத்தினை மணிமேகலையில் இயம்பியுள்ளார் (30 : 252 — 260).

நடுப்பாதை

மாத்தியமிக பௌத்தம் புத்தரின் நடுப்பாதைக் கொள்கையினைப் பெரிதும் வளர்த்தது. வாழ்க்கையின் எத்துறையிலும் எப்பொருளிலும் மிகுந்தும் குறைந்தும் செல்லாமல் நடுவான ஒரு நிலையில் நடத்தலே தக்கது என்பதே புத்தரின் கொள்கை. பேராசிரியர் காங்குலி,

> ' His way was the middle path between the two extremes of self indulgence and self moritification.

என்று இவர் கருத்தினை விளக்கியுள்ளார். வள்ளுவரும் '' மிகினும் குறையினும் நோய் செய்யும் '' என்று நடுப்பாதைக் கொள்கையினை எதிரொலிக்கக் கேட்கிறோம்.

தம்மபதமும் திருக்குறளும்

சுத்தபிடகத்தின் குட்டக நிகாயத்தின் ஒரு பகுதியாகிய தம்மபதத்தினைப் பின்பற்றி வள்ளுவரும் அறக் கொள்கைகளைத் தனித்தனி தலைப்புக்களில் அமைத்திருத்தல் கூடும். திருக்குறளைப் போலவே தம்மபதமும் உலகமொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது இரண்டிலும் ஒத்துக் காணப்படும் சில இடங்களை மட்டும் இவண் சுட்டுதல் நன்று.

தம்மபதம்			திருக்குறள்
வக்கம்	1 , 5	குறள்	76
	1 : 9		34, 271
	1 : 12		355, 423
	1 : 15		655
	1 : 19		834
வக்கம்	2 , 10		25
	7 , 6		151
பாலவக்கம்	(5)		சிற்றினம் சேராமை (46)
பண்டிதவக்கம்	(6)		பெரியாரைத் துணைக்கோடல் (45)

அருகவக்கம் (8) பிராமணவக்கம் (26) } நீத்தார் பெருமை (3)
புத்தவக்கம் (10) பிக்குவக்கம் (25) }
தண்கவக்கம் (24) அவாவறுத்தல் (37)
தீச்செயல் தவிர்தல், தற்செயல் புரிதல், மனத்தூய்மை பெறுதல் என்பனவே புத்தர் போதனையின் சாரம் என்று தம்மபதம் மொழிகிறது.

Sabba papassa akaranam Kusalasya upasampada
Saccittam pariyodapanam etam buddhana sasanam (183)

இவற்றை வள்ளுவர் புறக்கணித்துவிட்டார் எனப் பேசுதல் ஒண்ணுமோ?

காமத்துப்பாலில் ஓர் இடம். காமனைக் கடந்த வாமனாகிய புத்தர் பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்து இல்லறத்தில் வாழும் சாவகர்க்கு ஒருவன் ஒருத்தி என்ற நிலையின் காதலறம் புரிதலை வரையறுத்துள்ளனர். சம்யுக்த நிகாயத்தில் (சுத்தபிடகம்) 12 : 56 கூறப்பட்டுள்ள கருத்தும் நெய்யால் எரிநுதுப்பேம்' என்ற குறள் கருத்தும் ஒத்துள்ளன.

திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலோ எனின் அன்று, மூல நூல். வழிநூலோ எனின் அன்று, முதல் நூல், புத்தரின் சீலங்களைச் சிறந்த அறங்களாகக் கொண்டவர் வள்ளுவர் என்பதன்றிப் பிடகங்களை எழுத்துவிடாமல் மொழிபெயர்த்துத் தமிழில் தந்தனர் எனக்கூற வரவில்லை. சான்றாக கள்ளுண்ணாமை என்ற சீலத்தை எடுத்துக்கொண்டால் தம் மதிநலமதுகைக்கேற்பப் பத்து வகைகளில் இச்சீலத்தினை வலியுறுத்தினரென்பதன்றி, இவ்வதிகாரம் முழுதுமே பௌத்த நூலின் மொழிபெயர்ப்பென மயங்குதல் மாசுடையோர் கோள். குறள் கருத்துக்கள் எல்லாம் வள்ளுவரின் சிந்தையெனும் விளை நிலத்தில அறுவடை செய்யப்பெற்ற' மணிகள் என்பதும். ஏனைய மொழி நூல் பயிற்சியாற் பெற்ற அறிவுரம் ஊட்டச்சத்தாய் உதவியதென்பதும் உணரப்படும். ஆதலின், வள்ளுவர் பயின்ற பாலி, வடமொழி, பாகதம் முதலிய அயல்மொழி நூல்களில் காணப்படும் அருங்கருத்துக்களும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலிய தமிழ் நூல்களில் காணப்படும் சீரிய சிந்தனைகளும் திருக்குறளில் இடம் பெற்று வளம்கொழிக்கக் காண்கிறோம். எனின், ஒப்புமைப் பகுதியால் வள்ளுவர் சொந்த சிந்தனை அற்றவர் என்று எண்ணிவிடுதல் ஒவ்வாது. அவர் உள்ளத்தைக் கவர்ந்த எண்ணங்களில் புத்தரின் பொன்மொழிகளும் இடம் பெற்றுள்ளன என்பதே எமது கருத்து.

'தவ'

இரா. இளவரசு, எம். ஏ., பிஎச். டி.,

'தவ' என்னும் உரிச்சொல்லே இக்குறிப்புரையின் கரு. கருவுக்கு உருக்கொடுப்பதன் முன் உரிச்சொல் பற்றித் தெளிவோம்.

தொல்காப்பியர் குறிப்பிடும் உரிச்சொற்களில் 'இலம்பாடு, சீர்த்தி, செழுமை, வெம்மை' முதலிய பெயர்ச் சொற்களும் நம்பு. படர், புலம்பு முதலிய வினையடிகளும் உறு, தவ, நனி முதலிய பெயர்—வினையடைகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு வேறு பட்டு நிற்கும் உரிச்சொற்களை 'தாது சொற்கள்' (தெய்வச் சிலையார் உரியியல் 1 உரை) எனவும், 'வேர்ச் சொற்கள்' (தெ பொ. மீ. தமிழ் மொழி வரலாறு பக். 112, 1973) எனவும் 'பெயரடை வினையடைச் சொற்கள்' (K. Zvelebil, Tamil Culture VIII P 45. 1959) எனவும் ஆய்வாளர் வேறுபட்டு விளக்குவர். சில உரிச்சொற்களை மட்டும் கருத்தில் கொண்டு தரப்பட்ட பகுதி விளக்கங்களாகிய இவை நிறைவும் முழுமையுமுடையன அல்ல.

தொல்காப்பியர் தரும் உரிச்சொற்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது பொருள் வெளிப்படையாக விளங்காத சில அருஞ்சொற்களையே (வெளிப்படவாரா உரிச்சொல் உரியியல் 2) உரிச்சொற்களாக அவர் கருதியுள்ளமை புலப்படுகிறது சொல் லுக்குப் பொருள் கூறும் பணியே உரியியலில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது சொல்லும் அதன் பொருளுமே உரியியலின் உயிர்நிலையாக அமைந்துள்ளன.

உரிச்சொற்கள் பலவும் அருஞ்சொற்களாதல் பற்றியே 'செய்யுட்குரியன உரிச்சொல்' (நன்னூல் உரியியல் 1) என்றும் 'உரிச்சொல் என்பது செய்யுட்கேயுரிய சொல்' (ஞா. தேவ நேயன், தமிழ் வரலாறு பக். 131, 1967) என்றும் பிறர் குறித் தனர். சொல்லுக்குப் பொருள் கூறும் பிங்கலம் முதலிய நிகண்டு களை 'உரிச் சொல்' (உரியியல் 19) என்றே பவணந்தியார் குறித்திருப்பதும் பிங்கல நிகண்டின் சிறப்புப் பாயிரமும் கயாதர நிகண்டின் பாயிரமும் அந்நூற்களை 'உரிச்சொல்' என்றே குறிப்பிடுவதும் நோக்கத்தக்கன.

இங்ஙனம் அருஞ்சொற்களாக அமையும் உரிச்சொற்களில் ஒன்று 'தவ'. உரிச்சொற்களின் பொருள் கூறத் தொடங்கிய முதல் நூற்பாவிலேயே 'மிகுதி'ப் பொருளில வரும் மூன்று சொற்களில் இதுவும் ஒன்றாகச் சுட்டப்படுகிறது. பெயர் வினைச் சொற்களைச் சார்ந்து உரிச்சொற்கள் தோன்றும் (தொல் பெயரியல் 5) என்பதற்கேற்ப 'புரை தவ' (கலி 8) 'தவப்

பிரிக்கும்' (அகம் 327) என்ருங்கு இச்சொல் பயின்று வரும். ஒரு பொருளை உணர்த்தும் உரிச்சொற்களில் (தொல் உரியியல் 1) ஒன்ருன இது முதனிலை இறுதி நிலையாகப் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்தாமல் (தொல் உரியியல் 99) 'வேற்றுமைச் சொல்' லாகத் (தொல் எச்சவியல் 60) தொல்காப்பிய இலக்கணப்படி அமைந்துள்ளது.

எட்டுத்தொகை இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ள இச்சொல் பத்துப்பாட்டில் அருகியே வழங்குகிறது. திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங்கதை ஆகிய நூற்களில் இடம் பெறவில்லை. கால வளர்ச்சியில் செய்யுள் வழக்கில் அருகி மறைந்த இச்சொல் இன்றும் உலக வழக்கில் உயிரோடிருக்கிறது திருச்சிராப்பள்ளி மாவட்ட இலால்குடி வட்டத்தைச் சார்ந்த காட்டூர் — இராமநாதபுரப் பகுதி. அங்கே ஒரு பெண் பனை. அதிலேறி ஒருவன் காய்களை வெட்டுகிருன் ஒரு பிஞ்சுக் குலையும் வெட்டப்பட்டு வீழ்கிறது. அதைக் கண்டு மரத்தடியில் நின்ற இன்ஞெருவன் 'தவப்பிஞ்சுடா தவப்பிஞ்சுடா' என்று குரல் கொடுக்கிருன். இதைக் கேட்டதும் 'தவப் பிஞ்சா? தவம் செய்து பிறப்பெடுத்ததா? என்ன இது!' என்று எண்ணத் தோன்றும். மரத்தடியில் நின்றவனிடம் 'என்னப்பா தவப் பிஞ்சு?' என்று கேட்டால் 'பாவம். ரொம்பப் பிஞ்சுங்க' என்பான் மிகப் பிஞ்சாக இருப்பதே 'தவப் பிஞ்சு' எனத் தெளியலாம். அவரை, வெண்டை முதலியவற்றின் மிக்கிளம் பிஞ்சுகளையும் 'தவப்பிஞ்சு' எனக் குறிப்பதைக் கேட்கலாம் இங்கே 'தவ' என்பது மிகுதிப் பொருளில் வரும் உரிச்சொல்லாகும். இவ்வழக்கு இலால்குடி வட்டாரத்தின் பல ஊர்களில் நிலவுகிறது.

இவ்வாறே பழுது (தொல். உரி 28) முழுது (தொல் உரி 30) கம்பலை (தொல் உரி 53) முதலிய வேறு சில உரிச்சொற்களும் உலக வழக்கில் நிலவுகின்றன இதனுல் 'உரிச்சொல் என்பது செய்யுட்கேயுரிய சொல்' என்பது பொய்த்துப் போகிறது. மேலும் பேசுவோர்க்கே வெளிப்படையாகப் பொருள் விளங்காத வளி (காற்று—சூருவளி) அல் (இரவு—அல்லும் பகலும்) முதலிய பல அரிய சொற்கள் பேச்சில் வழங்குகின்றன. ஆதலால் அருஞ்சொற்கள் என்றதுமே அவை செய்யுட் சொற்கள் என முடிவு கட்ட வேண்டியதில்லை. எனினும் உலக வழக்கினும் செய்யுள் வழக்கிலேயே அருஞ் சொற்கள் பெரும்பான்மை பயின்று வருவதால் அருஞ்சொற்களாகிய உரிச்சொற்களைச் செய்யுட்குரியனவாகக் கருதினர் போலும்! உலக வழக்கிலும் உரிச் சொற்கள் பயின்றுவருவதைக் காணும்பொழுது பவணந்தியார் போல 'செய்யுட்குரியன உரிச்சொல்' எனத் தொல்காப்பியர் வரையறுக்காததன் நுட்பம் புலனுகின்றது.

பாவேந்தரின் காதலா? கடமையா?

இராம. சுப்பிரமணியன், M. A., B. L., B. Lib Sc.
4-B. தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி. சென்னை-5.

பாவேந்தர் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்.' 'புரட்சிக்கவி.' 'வீரத்தாய்' 'காதலா? கடமையா?,' 'கடல்மேற் குமிழிகள்' 'எதிர்பாரா முத்தம்' போன்ற குறுகிய காவியங்களைப் படைத்துத் தந்துள்ளார்.

தமிழ் இலக்கிய மரபிலே தம்முள் மாறுபட்டுள்ள காதலும் கடமையும் கதைப் பொருளாக அமைந்து கருத்து விருந்தளிக்கிறது 'காதலா? கடமையா?' என்ற புரட்சிக் கவிஞரின் இந்நூல். முப்பத்து எட்டு இயல்களைக் கொண்ட இந்நூல், நாடக மரபு பற்றிச் செல்கிறது. முரண்பட்ட காதலையும் கடமையினையும் அவிழ்ப்பதற்குத் தியாகம் பயன்படுகிறது. இக் கருவை மையமாகக் கொண்டு இயல்கின்றது இந் நாடகம்.

மழைநாட்டு மாப்பேரரசன் கொன்றை நாட்டைத் தன்னாட்சிக்குட் படுத்திய நாளில் அந்நாட்டிற்கு உரிமை வழங்குவதாக

ஐந்து நாட் பின்னை நாம் அங்கு வருவோம்
வந்து விடுதலை வழங்குவோம் நன்றே [1]

என்று அறிவித்து ஒரு நாள் கொன்றை நாடு நோக்கி வந்தான். அங்கே, கொன்றை நாட்டை முன்னாண்ட மன்னனின் பேர்த்தியாகிய கிள்ளையை அங்கே கண்டு உள்ளம் வேர்க்கின்றான். விடுதலை வழங்கும் முன்பு கிள்ளையைப் பெறுவது என்று எண்ணிக் கொன்றை நாட்டுத் தலைவர்களைச் சிறைப் படுத்தினான். அது மட்டுமல்லாமல் மக்களையும் மிகுந்த தொல்லைக்காட் படுத்தினான் கொன்றை நாட்டை முன்னாண்ட அரசனின் அமைச்சன் பேரனாகிய தங்கவேல் என்பான் மக்கள் தலைவருள் ஒருவன் என்றாலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மறவர்க்குத் தலைவனும், ஏழைக் குடும்பத்தில் பிறந்து நாட்டின் விடுதலைக்குத் தொண்டாற்றுபவனுமாகிய மகிணனுக்கு ஓர் மடல் வரைகின்றான். அதன் கண், கிள்ளையின் காதலன் மகிணனை

---

1. பாரதிதாசன், காதலா? கடமையா?, பதி. 2, பாரி நிலையம், சென்னை. 1974 பக், 1.

கடமை செய்கநீ, கடிது செய்க
உன்கையால் கிள்ளையின் உயிரைப் போக்கு [2]

என்று வேண்டுகின்றான். அத்துடன் தங்கவேலும் மாண்டு விடுகின்றான் அதன் பின்னால் கிள்ளையின் மனங்கிள்ளிய மகிணன் 'காதல் பெரிதன்று! கடமை பெரிது' என்று வாள் கொண்டு கிள்ளையை நோக்கிச் சென்றான். ஆனால் அவளோ அதனை அறிவாள்.

கலைக்கழகு நல்குதிருக் கண்ணமுதை மாய்க்கக்
கொலைக் கருவி யான் கொண்டதை அறிவாள் [3]

என்று மகிணன் பேசுவான் முதல் வாளைத் தூக்கினான்; வாள் கீழே வீழ்ந்தது. கிள்ளை விழித்தாள் அப்போது அவன்,

.... காதலைப் பார்க்கிலும்
நாட்டுக் கடமையே நனிபெரி தென்று
குறிக்க வேண்டும் கொல்லவந் தேன்உனை [4]

என்றான், அவனுடைய துணிவை ஏற்று ஒப்பினாள் கிள்ளை,

கொன்றை விடுதலைக்குக் கொடுப்பீர் என்னை
என்றன் கற்பை எளிதாய் நினைப்போன் [5]

என்று வாளை எடுத்துத் தன் காதலன் கையில் கொடுப்பாள். அப்போது திரை மறைவில் நின்றிருந்த மன்னன் மறைமுகத் தோற்றத்தைக் கலைத்து அவ்விடத்திலேயே விடுதலைப் பட்டயம் நல்கினன்.

விடுதலை பெற்றது நெடிய கொன்றை,
விடுக அன்னையே. விடுக வாளை [6]

கொன்றை நாட்டு அரண்மனை மன்றில் மக்கள் கூட்டம் கூடிற்று. மழைப் பேரரசன் தன் செய்கைக்கு மனம் வருந்தி உரை நிகழ்த்தினன்.

நல்ல தோர் ஆட்சியில் எல்லிருமாக
மல்கு சீரொடு வாழிய [7]

என்ற வாழ்த்திசை முழங்கினன். பின்பு மகிணன் கிள்ளை திருமணம் இறுதியில்,

---

2. மே. கா. நூ. பக் 74
3. மே கா. நூ, பக், 78.
4 மே. கா நூ. பக். 79.
5. மே. கா நூ. பக். 80
6 மே கா. நூ பக். 80.
7. மே கா. நூ. பக். 85

ஒப்பிட எவர்க்கும் ஒருவீ டொருநிலம்
ஒருதொழில் ஓர்ஏர், உழவு மாடுகள்
விரைவில் சென்றால் தருவார் [8]

என்ற மக்களரசை நிலைப்படுத்தி விடுகிறார் பாவேந்தர்.

பாவேந்தர் அவர்கள் இந்த நாட்டின் விடுதலையின்மீது — சுதந்திரத்தின்மீது — கொண்டிருந்த வேட்கையினை நாம் நன்கு உணரும் வகையில் உணர்த்துகின்றார்.

தருவதோர் பொருளோ உரிமை?
தருவதோர் பொருளெனில் மீண்டும்
பறிப்பதோர் பருப்பொருள் அதுவே யன்றோ.
வென்ற தோளோடு, மீண்டும்நம் தோள்எனும்
குன்று, சாடிய குருதி தோய்ந்த
வெற்றி நிலத்தில் விளைவதாம் விடுதலை [9]

பாவேந்தர் விரும்பும் வேட்கையினை இடையிடையே விளக்கக் காண்கின்றோம்.

இந்நாட்டில் பிறரால் இறக்குமதி பெற்ற
சாதி நினைப்பாலும் தாங்கா தகன்றது
பெண்கள் விடுதலை பெற்றனர்
கைம்மை இல்லை
சமயப் பிணக்கெனும் சழக்கும் இல்லை [10]

என்ற வரிகளில் உணர முடிகிறது.

'நோக்குவ எல்லாம் அவையே போறல்'

என்ற தொல்காப்பிய மரபினை.

அவன் கண்ணெதிரில்
வெயில் தழுவியதோர் வெறுவெளிதனில் அவ்
வயில்விழிக் கிள்ளை அழகு காட்டினாள்.
இன்பத்தை மகிணன் இருகையால் தாவினான்
இருவிழி ஏமாந்து போக இஃதவள்
உருவெளித் தோற்றமென் றுணரலானான் [11]

என்ற விடத்துக் காட்டுகிறார் கவிஞர் அத்துடன் கவிஞர் பொதுமை எண்ணக் கருத்துக் கோவைகளைத் தருகின்றார். மகிணன் தன் மனங்கிள்ளிய கிள்ளியைக் கொல்ல வருவது புதுமையே ஆம்.

---

8. மே. கா. நூ. பக். 86.
9. மே கா. நூ. பக். 14.
10. மே. கா. நூ. பக். 22—23.
11. மே. கா. நூ. பக். 33.

பெயரின் ஆகிய தொகை

டாக்டர். மோ இசரயேல்
துணைத் தமிழ்ப் பேராசிரியர். மதுரைப் பல்கலைக் கழகம்

தொல்காப்பியனார் வேற்றுமையியலில் வேற்றுமைகளின் எண்ணிக்கை, முறை பெயர் ஆகியவற்றை முதல் மூன்று நூற் பாக்களில் (தொல் சொல். 62—64) சுட்டி, பின்னர் அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (தொ. சொ. 65) என்று குறிப்பிட்டு எழுவாய் வேற்றுமையின் வடிவம் பெயராய் நிற்றலே என்பதைத் தெரிவிக்கின்றார், தொடர்ந்து அவ்வேற்றுமை பயனிலைப்பாடு தோன்றும் நிலைமையை விளக் கும் வாயிலாக அவ்வேற்றுமையின் புறநிலை வழக்கினை (external distribution)

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே
(தொ. சொ. 66)

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார். அடுத்த நூற்பாவில்

பெயரின் ஆகிய தொகையு மாருளவே
அவ்வும் உரிய அப்பா லான (தொ, சொ. 67)

என்று கூறி; முதல் வேற்றுமைக்கண் பெயர் மட்டுமன்றி, பெயரி னாகிய தொகையும் எழுவாயாக வந்து பயனிலை கொள்ளும் என்பதைத் தெளிவுபடுத்தி உள்ளார்,

எ-டு. ஆ உண்டு அவன் வாழ்க யானைக் கோடு கிடந் தது மதிமுகம் வியர்த்தது.

பெயரினாகிய தொகை என்ற சொற்றொடருக்கும் அதனைத் தொடர்ந்து நிற்கும் 'உம்' இடைச் சொற்கும் உரையாசிரி யர்கள் வெவ்வேறுபட்ட விளக்கங்கள் தந்துள்ளனர்.

இளம்பூரணர் 'அறுவகைத் தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும்' என்று கூறிய

பின்னர் உம்மையான் வினையும் பெயருந்தொக்க தொகையும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும் என்று கொள்க' என்கின்றார்.

சேனாவரையர் 'பெயரும் பெயருந்தொக்க தொகையு முள' என்று கூறி, உம்மையாற், பெயரோடு பெயர் தொக்கனவே யன்றி, நிலங்கடந்தான், மாக்கொணர்ந்தான் எனப் பெயரொடு வினை வந்து தொக்க வினையினாகிய தொகையுமுள; ஆகவே பெயரொடு பெயரும் பெயரொடு தொழிலுந் தொக்க தொகை யென்பது பெற்றாம்' என்கின்றார்.

நச்சினார்க்கினியர், 'பெயரும் பெயருந்தொக்க தொகையும் உள (உம்மையான், பெயரும் வினையும் தொக்க தொகையும் உள)' என்று கூறி நிலங்கடந்தான், குன்றத்திருந்தான்' எனப் பெயரொடு வினை தொக்கன 'எழுவாயாய்ப் பயனிலை கொள்ளாது முற்றாய் நிற்கும் என்று உணர்க. இதனால், தொகை இருவகைய என்பதூஉங் கூறினார் ஆயிற்று' என்கின்றார்.

தெய்வச்சிலையார் 'பெயரான் ஆகிய தொகைச் சொல்லும் உள' என்று கூறி 'உண்மை இறந்தது தழீஇய எச்சவும்மை' என்கின்றார். மேலும் அவர் 'இவை இரண்டு பெயர்மேலும் பயனிலை ஒத்து வருதலின் வேறோதப்பட்டன' என்கின்றார்.

எ—டு. யானை குதிரை உள; செல்க

கல்லாடனார் 'தனிப்பெயரே யன்றித் தொகைப் பெயர்களும் பயனிலை கொள்ளும் என்பது உணர்த்துதல் நுதலிற்று, என்று உரை கூறி, 'தொகையும் பயனிலை கொள்ளும் என்கின்றமை யின் இவையும் எழுவாயாகற் பாலபிற' என்ற விளக்கம் தருகின்றார்.

புறநிலை வழக்கு

பெயரினாகிய தொகை என்று கூறுவதில் தொல்காப்பியனார் தொகைச் சொல்லின் உள்ளமைப்பினைக் (internal structure) கருதவில்லை. தொகைச் சொல் தொடர்நிலையில் அமைந்து கிடக்கும் புறநிலை வழக்கினையே கருதி உள்ளார். பெயர் பய னிலை கொள்ளுதல் போல பெயரின் ஆகிய தொகையும் பயனிலை கொள்ளும் என்பதுவே அவர் கருத்து எனவே இளம்பூரணர்

சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் 'பெயரினாகிய தொகை' என்பதற்குப் பெயரும் பெயருந் தொக்க தொகை என்று கூறும் உள்ளமைப்பு அடிப்படையான விளக்கம் பொருந்துமாறில்லை. கல்லாடனார் 'தொகைப் பெயர்கள்' (Noun Compounds) என்று விளக்கம் கூறுவதே பொருந்துவதாக உள்ளது. ஏனெனில் மூன்று நூற்பாக்களில் (தொ சொ. 65—67) முதல் நூற்பா தவிர ஏனையவை முதல் வேற்றுமையின் வழக்கு (function) பற்றியே கூறுகின்றன. வடிவம் பற்றியும் உள்ளமைப்பு பற்றியும் கூறவில்லை என்பது கருதத் தக்கது. இந்தப் போக்கினைத் தொல்காப்பியனார் பிற வேற்றுமைகளுக்கு இலக்கணம் கூறுவதிலும் காணலாம். முதல் நூற்பாவில் வேற்றுமையின் வடிவத்தினையும் பொதுப் பொருளையும் சுட்டி இரண்டாம் நூற்பாவில் அதன் வழக்கினை கூறுகின்றார் ஆசிரியர்.

உம்மின் பொருள் :

உம் என்னும் இடைச்சொல்லான் இளம் பூரணர் கொல் களிறு, செய்குன்று, ஆடரங்கு போன்ற வினையும் பெயருந் தொக்க தொகைகளைக் கருதுவதும், சேனாவரையர் நிலங்கடந்தான், யாக்கொணர்ந்தான் போன்ற பெயரொடு வினை வந்து தொக்கனவற்றைக் கருதுவதும், நச்சினார்க்கினியர் பெயரும் வினையும் தொக்க தொகையாகிய வகையினைக் கருதி, தொகை இருவகைய எனக் குறிப்பிடுவதும் பொருந்துமாறில்லை. உம் இடைச்சொல் இவண் இறந்தது தழீஇய எச்சப் பொருளில் ஆளப்பட்டு பெயர் மட்டுமன்று, பெயரினாகிய தொகையும் முதல் வேற்றுமையாய் நின்று பயனிலை ஏற்கும் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

எ—டு. யானை வந்தது. யானைக்கோடு வந்தது.

— தொடரும்